விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2006,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்பு களுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*41.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும்

ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

42.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

பிலியந்தல தர்மசாஸ்த்ரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

47.

ஸம் நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## 2009, நவெம்பர் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0274 / '09

1.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் பிலியந்தல மத்திய மகாவித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) 6 ஆந் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையின் புள்ளிகள் முறை கடைப்பிடிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டில் 6 ஆந் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், முகவரி, புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மற்றும் பெற்ற புள்ளிகள் யாவையென்பதையும்,

(iii) போசிக்கப்படுகின்ற பாடசாலைகள் என்ற வகையில் முன்னுரிமை வழங்கப்படுகின்ற பாடசாலைகள் இருப்பின் அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் மத்தியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் பிள்ளைகள் எத்தனை பேர் உள்ளனரென்பதையும்,

(ii) இவ்விதமாக சேர்த்துக்கொள்ளப்பட விண்ணப்பித்த போதிலும் பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படாத பிள்ளைகளின் எண்ணிக்கை, அப்பிள்ளைகளின் பெயர்கள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் வரிசைக்கிரமத்தைக் கருத்திற் கொள்ளாமல் பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள பிள்ளைகள் அத்துடன் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் யாதென்பதையும்,

(ii) இவ்விதமாக இவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0294 / '09

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009, மே, 15 இற்கு முன்பு ஒவ்வொரு நாடும் தனது கடற்படுகை உரிமை தொடர்பாக உரிமைக் கோரிக்கையை விடுக்க வேண்டுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறு இவ்அமைச்சு செய்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) ஆம் எனில், சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்பிற்கு சமர்ப்பித்த கோரிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) புதிதாக உரிமைக்கோரிக்கை விடுக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர் என்பதையும்,

(ii) ஐக்கிய நாடுகள் சபை அல்லது பொருத்தமான உலக அமைப்பினால் உத்தியோகபூர்வமாக அது அங்கீகரிக்கப்படும் திகதி என்ன என்பதையம்,

அவர் மேலும் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0454 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சர்வ கட்சி மகாநாடு எப்போது தாபிக்கப்பட்டதென்பதையும்,

(ii) அதன் அங்கத்துவக் கட்சிகள் யாவையென்பதையும்,

(iii) சர்வ கட்சி மகாநாட்டின் தவிசாளரின் பெயர் யாதென்பதையும்,

(iv) தற்போதய தலைமையின் கீழ் மகாநாடு எத்தனை தடவைகள் கூட்டப்பட்ட தென்பதையும்,

(v) சர்வ கட்சி மகாநாட்டின் முன்மொழிவுகள் யாவையென்பதையும்,

(vi) மேற்படி முன்மொழிவுகளை ஏற்றுக்கொண்ட அரசியல் கட்சிகள் யாவை யென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0466 / '09

4.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

( அ) (i) வட மாகாணத்தில் எத்தனை பாடசாலைகள் உள்ளனவென்பதையும்,

(ii) இவற்றில் எத்தனை பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளனவென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் எத்தனை பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன வென்பதையும்,

(iv) யுத்தம் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் எப்போது திறக்கப் படுமென்பதையும்,

(v) மூடப்பட்டுள்ள மேற்படி பாடசாலைகள் மற்றும் கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) யுத்தம் காரணமாக மாணவ மாணவிகளின் பாடப் புத்தகங்களும் கற்றல் உபகரணங்களும் அழிவடைந்துள்ளனவென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) ஆமெனில், அவர்களுக்கு பாடப் புத்தகங்களை வழங்க எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்பதையும்,

(ii) யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மாணவ மாணவிகளில் எத்தனை பேருக்கு முறையாகக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பாடசாலைகள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும்,

(iii) தற்காலிக முகாம்களில் தாபிக்கப்பட்டுள்ள தற்காலிக பாடசாலைகளில் எத்தனை மாணவர்கள் கல்வி பயில்கின்றனரென்பதையும்,

(iv) அவர்களின் கல்வி நடவடிக்கைகள் எப்போது ஒழுங்கு முறையாக்கப்படு மென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0512 / '09

5.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2003 இல் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கினால் அழிவடைந்த எப்பல ஆடுபாலத்திற்குப் பதிலாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியங்களி லிருந்து முச்சக்கர வண்டி செல்லக்கூடியவாறான பாலமொன்றை அமைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டதென்பதையும்,

(ii) உத்தேசிக்கப்பட்டிருந்த மேற்படி பாலத்தை வேறோர் இடத்திற்கு கொண்டு செல்ல உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட முயற்சிக்கு கிராமவாசிகளின் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதென்பதையும்,

(iii) உத்தியோகத்தர்கள் உருவாக்கிய அநாவசியமான சிக்கல்கள் காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்படி பாலம் அமைப்பதை தற்காலிகமாக இடைநிறுத்தியதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மீண்டும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை முகாமையாளர் இப்பாலம் அமைப்பதை ஆரம்பிக்கும் விருப்பத்துடன் இது தொடர்பாக தவலம பிரதேச செயலாளரிடம் தகவல்களை விசாரித்துள்ளாரென்பதையும்,

(ii) தற்போது தற்காலிகமாக தகடுகள் இடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டுள்ள எப்பல ஆடுபாலம் மிகவும் சிதைந்துள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) உரிய இடத்திலேயே மேற்படி பாலத்தை அமைக்க விதப்புரை வழங்குமாறு தவலம பிரதேச செயலாளருக்கு அவர் அறிவுரை வழங்குவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0518 / '09

6.

கௌரவ ஜயந்த விஜேசேகர,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் 2009 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(ii) இத்தொகையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை,

(iii) இக்கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0532 / '09

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தொழில் உறவுகள், மனித வலு அமச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1980 ஆம் ஆண்டு யூலை வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதன் விளைவாக தொழில்களை இழந்த நெசவுக் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இவர்களில் மீண்டும் தொழில் வழங்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) மீண்டும் தொழில் கிடைக்கப்பெறாதவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) இவர்களுக்கு தொழில் கிடைக்காமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 32/89 பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபன பகிஷ்கரிப்பாளர்களுக்கான சலுகைகள் சிலருக்கு இதுவரை வழங்கப் படாமைக்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2006.08.30 ஆம் திகதிய அப/06/1540/230/039 இலக்கமுடைய அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ள போதிலும் தொழில் ஆணையாளர் இக் கொடுப்பனவுகளை தாமதிக்கின்றார் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0703 / '09

8.

கௌரவ எல்.ஜீ. வசந்த பியதிஸ்ஸ,—- கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாண சபையின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தேசியப் பாடசாலைகளிலும் மாகாண சபை பாடசாலைகளிலுமுள்ள மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்களற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளில் மேசை, கதிரை பற்றாக்குறையின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) ஆசிரியர் மேசை மற்றும் ஆசியர் கதிரை பற்றாக்குறையின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0777/ '09

9.

கௌரவ வை.எம்.நவரத்ன பண்டா,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005, 2006, 2007, 2008, 2009 ஆகிய வருடங்களுக்காக இவ்வமைச்சுக்கு வரவு செலவு திட்டத்தில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது,

(ii) இந்நிதித் தொகை மூலதனம் மற்றும் மீண்டுவரும் என்றவாறு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) அந்தந்த வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கும் கிடைத்த நிதிக்கும் இடையே வேறுபாடு உண்டா,

(iv) ஆமெனில், வருடாந்தம் வெவ்வேறாக அத்தொகை எவ்வளவு,

(v) அவ்வாறு நிதி குறைந்திருப்பின் அதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள பிரதான நிறுவனங்களின் எண்ணிக்கையையும் அவை யாவை என்பதையும் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0467 / '09

10.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) "உலர் வலய வாழ்வாதாரம் தொடர்பான உபகரண கருத்திட்டம்' எனும் பெயரில் ஒரு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டு எப்போது நிறைவு செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது,

(ii) இக்கருத்திட்டம் செயப்படுத்தப்படுவதன் மூலம் எய்துவிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கம் யாது,

(iii) 'உலர்வலய வாழ்வாதாரம் தொடர்பான உபகரண கருத்திட்டத்துக்கு' 2007 ஆம் ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது,

(iv) ஒதுக்கப்பட்ட முழுத்தொகையில் வருட இறுதியில் செலவு செய்யப்பட்டுள்ள சதவீதம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2007 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீதமிருப்பின், மீதமாவதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0474 / '09

11.

கௌரவ பேமசிறி மானகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை 1948 முதல் இன்று வரை இந்திய அரசாங்கத்துடன் கைசாத்திட்டுள்ள உடன்படிக்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அது எந்த அரசாங்கங்களின் காலகட்டத்தில் என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு உடன்படிக்கையிலும் கைசாத்திட்டவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) 2005 முதல் இற்றை வரையிலான காலகட்டத்தில் இந்திய அரசாங்கத்துடன் இராஜதந்திர மட்டத்தில் எத்தனை சுற்று பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன என்பதையும்,

(ii) மேற்படி பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற திகதிகள் யாவையென்பதையும்,

(iii) பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற இடங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி கலந்துரையாடல்களின்போது இரண்டு நாடுகளையும் பிரதிநிதித் துவப்படுத்தியவர்களது பெயர் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0534 / '09

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஜூலை 1

2002 ஜூலை 1

1995 ஜூலை 1

ஆகிய தகதிகளில் மாகாண மட்டங்களிலும், தேசிய மட்டத்திலும் இயங்கிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இன்றைய தினத்திலுள்ளவாறு மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலு முள்ள ஆசிரியர்களது எண்ணிக்கை எவ்வளவென்பதையும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தொகை எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) ஆசிரிய, மாணவ விகிதாசாரம் என்னவென்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) கடந்த ஐந்து வருடங்களாக ஆண்டுதோறும் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0778 / '09

13.

கௌரவ வை.எம்.நவரத்ன பண்டா,— இளைஞர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005, 2006, 2007, 2008, 2009 ஆகிய வருடங்களுக்காக இவ்வமைச்சுக்கு வரவு செலவு திட்டத்தில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது,

(ii) இந்நிதித் தொகை மூலதனம் மற்றும் மீண்டுவரும் என்றவாறு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) அந்தந்த வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கும் கிடைத்த நிதிக்கும் இடையே வேறுபாடு உண்டா,

(iv) ஆமெனில், வருடாந்தம் வெவ்வேறாக அத்தொகை எவ்வளவு,

(v) அவ்வாறு நிதி குறைந்திருப்பின் அதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள பிரதான நிறுவனங்களின் எண்ணிக்கையையும் அவை யாவை என்பதையும் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0468 / '09

14.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தை விடுவித்ததன் பின்பு ஆரம்பிக்கப்பட்ட வன்னி நடவடிக்கையின் இறுதியல் வட மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பேர் இடம் பெயர்ந்துள்ளனர்,

(ii) வன்னி நடவடிக்கையை ஆரம்பிக்கும்போது குறிப்பிட்ட பிரதேசத்தில் அந்தந்த மாவட்டத்தில் எத்தனை சிவில் பிரசைகள் இருந்தார்கள்,

(iii) குறிப்பிட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் இடம்பெயர்ந்தோரில் சிறுவர்கள் வயதுவந்தவர்கள் எத்தனை பேர் இருந்தனர்,

(iv) இவர்களில் எத்தனை பேர் இதுவரை மீள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்,

(v) இவர்களை மீள்குடியமர்த்துதல் எந்தத் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்களில் எத்தனை அரச ஊழியர்கள் இருக்கின்றனர்,

(ii) நிரந்தரத் தொழில்புரிவோர் எத்தனை பேர்,

(iii) தொழில்வாய்ப்பற்றோர் எத்தனை பேர்,

(iv) தொழில் புரியாதோர் இருப்பின் தொழில் வழங்குவதற்காக எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0475 / '09

15.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 12.5 கிலோகிராம் அடங்கிய வீட்டுப் பாவனைக்கான ஒரு எரிவாயு சிலிண்டரிலிருந்து அரசாங்கம் அறவிடுகின்ற வரித் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) 2009 பெப்ருவரி மாதத்தில் 12.5 கிலோகிராம் அடங்கிய வீட்டுப் பாவனைக்கான ஒரு எரிவாயு சிலிண்டரிலிருந்து அறவிடுகின்ற தொகை எந்தளவில் அதிகரிக்கப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) வீட்டுப்பாவனைக்கான எரிவாயு சிலிண்டர்கள் மீது விதிக்கப்பட்ட வரியின் மூலம் 2008 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஈட்டியுள்ள மொத்த வருமானம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

---

## 2009, நவெம்பர் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0400 / '09

1.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இத்தகைய காணிகளில் எத்தனை நிரப்பு நிலையங்கள் உள்ளன என்பதையும்,

(iii) இவற்றில் ஐ.ஓ. சீ. கம்பனியின் கீழுள்ள நிரப்பு நிலையங்கள் உள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருப்பதால் புகையிரத திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இற்றைப்படுத்தப்படாத குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

0469 / '09

2.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— சகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வட மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயற்படும், வைத்தியசாலைகள் எத்தனை என்பதையம் மருத்துவச்சாலைள் எத்தனை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இவ் வைத்தியசாலைகளிலுள்ள,

(i) கட்டில்களின் எண்ணிக்கை,

(ii) பணிபுரியும் மருத்துவர் மற்றும் தாதிமார்களின் எண்ணிக்கை,

(iii) பணிபுரியும் வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை மற்றும்

(iv) இம் மாகாணத்தில் பணிபுரியும் முழு பணியாட்டொகுதி எவ்வளவென்பதை

அவர் குறிப்பிடுவாரா?

(இ) போதிய பணியாட்டொகுதி இன்றேல், வெற்றிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0476 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி , திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஒரு கிலோகிராம் பால்மாவின் இறக்குமதிச்செலவு எவ்வளவென்பதையும் ,

(ii) ஒரு கிலோகிராம் பால்மாவுக்காக விதிக்கப்பட்டுள்ள வரி வகைகள் யாவையென்பதையும் ,

(iii) விதிக்கப்பட்டுள்ள வரிகளின் சதவீதம் எவ்வளவென்பதையும் ,

(iv) ஒரு கிலோகிராம் பால்மாவுக்கு அரசாங்கம் விதித்துள்ள மொத்த வரி எவ்வளவென்பதையும்,

(v) ஒரு கிலோ கிராம் பால்மாவின் சந்தை விலை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) பால்மாவுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளின் மூலம் 2008 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஈட்டிய மொத்த வருமானம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0500 / '09

4.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) "மஹிந்த சிந்தனை" கொள்கைப் பிரகடனத்தின் 48 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) முன்மொழியப்பட்டுள்ளவாறு, சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பாரிய அளவிலான கைத்தொழிற்சாலையொன்று உருவாகும் வகையில் 300 புதிய கைத்தொழிற்சாலைகளை தாபிக்கும் திட்டத்தின் கீழ் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கைத்தொழிற்சாலைகளும் அவை நிர்மாணிக்கப்பட்டள்ள பிரதேச செயலகப் பிரிவுகளும் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0519 / '09

5.

கௌரவ ஜயந்த விஜேசேகர,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட கட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைக்கு ஓதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(ii) இத்தொகையில் திருகோணமலை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(iii) இத்தொகையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் வெவ்வேறாக யாவை,

(iv) இக்கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0630 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) சவுதி அரேபியாவில் றியாத் நகரின் இலங்கைத் தூதரகத்திலும் அதன் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 650 தொழில் செய்வோர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதை அவர் அறிவாரா,

(ஆ) (i) மேற்குறிப்பிட்டோர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பதன் காரணம் யாது,

(ii) இவர்களை இந்நாட்டுக்கு அழைத்து வருவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0705/ '09

7.

கௌரவ வஜிர அபேவர்தன,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007/ 2008 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த நிறுவனங்களில் பதிவு செய்ப்பட்டிருந்த எத்தனை மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன என்பதையும்,

(iii) மேன் முறையீடுகள் மூலம் எத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதையும்,

(iv) அந்த மாணவர்கள் எந்த அடிப்படையில் சேரத்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதையும்,

(v) அந்த மாணவர்கள் சேரத்துக் கொள்ளப்பட்ட ஆகக்குறைந்த 'Z' புள்ளி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்புடையதாக 2009 ஆம் ஆண்டில் எத்தனை மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்பதையும்,

(ii) கடந்த வருடம் மேற்குறித்த விடயத்துடன் தொடர்புடையதாக நிராகரிக்கப் பட்ட விண்ணப்பங்களிலிருந்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டிருப்பின், இவ்வருடமும் அவ்வாறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்களா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0706 / '09

8.

கௌரவ சரத்சந்திர ராஜகருணா,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில், கிரிந்திவெல மாளிகாவத்தை வனச் செய்கை பிரதேசத்தக்குள் குப்பை கூழங்களை அகற்றுவதற்கான கருத்திட்ட மொன்றின் பொருட்டு காணியொன்று ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) முழுமையாக 31 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட வனச் செய்கையில் உத்தேச கருத்திட்டத்திட்டத்துக்கு பெறுமதியான மரங்களைக் கொண்ட ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) உத்தேச கருத்திட்டத்துக்குரிய காணியில் இலங்கையில் மிகவும் அரிதான பிரச்புச் செடிகள், பலதரப்பட்ட மூங்கில் மரங்கள், மஹோகனி, பலா, நெந்துன் எக்கேசிபா, பைனர் போன்ற தாவரங்கள் இருக்கின்றன என்பதையும்,

(ii) வனப் பயிர்ச்செய்கையைக் கொண்ட இந்த பாதுகாப்புப் பிரதேசம் அழிவதனால் அங்கு வாழும் விலங்கினங்கள், மற்றும் பல்வகை பறவைகளுக்கு வாழ்வதற்கான நிலப்பிரதேசமொன்று இல்லாமல் போவதனால் பல சூழல் பிரச்சினைகள் ஏற்படும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) உத்தேச கருத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிக்கு அண்மையில் அமைந்திருக்கும் புதர்களுடன் கூடிய எத்தகைய பயிர்ச்செய்கையும் இல்லாத காணியை இக்கருத்திட்டத்திற்குப் பயன்படுத்தாதிருக்காமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபையில் சமரப்பிப்பாரா?

(ஈ) குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கான உத்தேச காணிக்குப் பதிலாக பாதுகாப்பு பிரதேசத்தினுள் அமைந்துள்ள எத்தகைய பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப் படாத காணியொன்றை ஒதுக்கிக் கொடுப்பதற்கு அவர் உரிய நடவடிக்கை எப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0477 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி , திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பெற்றோல் மீது விதிக்கப்பட்டுள்ள வரி வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவ்வரி வகைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஒரு லீட்டர் பெற்றோலுக்கு விதிக்கப்படுகின்ற மொத்த வரித்தொகை மற்றும் சதவீதமாக அது எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) ஒரு லீட்டர் பெற்றோலின் சந்தை விலை எவ்வளவென்பதையும்,

(ii) கடந்த ஐந்து ஆண்டுகளில் பெற்றோல் மூலம் அரசாங்கம் ஈட்டியுள்ள மொத்தப் பணம் எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0573 / '09

10.

கௌரவ ஆர்.பீ.ஏ.ரணவீர பதிரன,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அத்தியாவசிய நுகர்வுப் பண்டங்களின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2005 தொடக்கம் 2009 வரை ஒவ்வொரு ஆண்டிலும் அரிசி, மிளகாய், பருப்பு, பால்மா மற்றும் சீனி ஆகியவற்றின் ஒரு கிலோகிராமின் விலை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இப்பொருட்களிள் விலை குறைந்துள்ளதா இன்றேல் அதிகரித்துள்ளதா,

(iii) குறிப்பிட்ட விலைகள் அதிகரித்திருப்பின் இந்த அத்தியாவசிய நுகர்வுப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0631/ '09

11.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மொரகஹகந்த நீர்த்தேக்க கருத்திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா,

(ஆ) 2009 ஆகஸ்ட் மாதமளவில் இக்கருத்திட்டத்தின் காரணமாக மூழ்குகின்ற மக்கள் சொத்துகளின் மதிப்பீட்டுக்மைய இவர்களுக்கு வழங்கப்படுகின்ற நட்டஈடு பற்றிய அறிக்கையொன்றை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா,

(இ) (i) 2009 யூன் மாதம் 30ஆம் திகதி நாஉல பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற கூட்டத்தில் தமது சொத்துக்களை இழக்கின்ற குடியிருப்பாளர்களிடமிருந்து ஏதேனும் ஓர் உடன்படிக்கையில் கையொப்பம் பெறப்பட்டதா,

(ii) ஆமெனில், அவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் யாவை,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட மறுத்த குடியிருப்பாளர்களுக்கு மொரகஹகந்த கருத்திட்டத்தில் வழங்கப்பட்டிருந்த கூலி வேலைகள் நிறுத்தப் பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0539 / '09

12.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் பிரகாரம் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) மேற்படி பணத்தொகையில் 2009 சனவரி 01ஆம் திகதி முதல் 2009 யூலை 01 ஆம் திகதி வரை செலவு செய்யப்பட்ட மொத்த பணத்தொகை யாதென்பதையும்,

(iii) இது எந்த செலவினத் தலைப்புகளின் கீழ் என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் பிரகாரம் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென் பதையும்,

(ii) மேற்படி பணத்தொகையில் 2008 சனவரி 01 ஆம் திகதி முதல் 2008 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் செலவுசெய்யப்பட்ட மொத்த பணத்தொகை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0574 / '09

13.

கௌரவ ஆர்.பீ.ஏ.ரணவீர பதிரன,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களாகக் கருதப்படுகின்ற சீனி, பருப்பு, பால் மா, மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் போன்றவை அரசாங்கத்தினால் அல்லது தனியார் துறையினால் இறக்குமதி செய்யப் பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வருடம்தோறும் எவ்வளவு தொகை இறக்குமதி செய்யப்பட்டதென்பதை தனித்தனியாகவும்,

(iii) இவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற அளவானது இந்நாட்டுத்தேவை யில் எத்தனை சதவீதம் என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் போது வரி அறவிடப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில் அறவிடப்படுகின்ற வரி வகைகள் யாவையென்பதையும்,

(iii) இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு பொருளினதும் ஒரு கிலோவுக்காக அறவிடப்படுகின்ற சகல வரிகளினதும் மொத்தம் எவ்வளவென்பதையும்,

(iv) பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) இன்றேல் எவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0842/ '09

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மத்தேகொட, வெயான்கொட மற்றும் பூகொட ஆகிய ஆடைத்தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்பட்டதிகதிகளையும்,

(ii) தற்போது அத்தொழிற் சாலைகள் இயங்குகின்றனவா என்பதையும்,

(iii) அவ்வாறெனில் ஒவ்வாரு ஆடைத்தொழிற்சாலையிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கையையும்,

(iv) அத்தொழிற்சாலைகள் அரசாங்கத்திற்கு அல்லது தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0894/ '09

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தொடர்பில் பின்வருவனவற்றில்,

(i) 2005 இலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையான வருடாந்த வருமானங்களும் செலவீனங்களும்,

(ii) தலா வருட அடிப்படையில் அரசாங்கத்திடமிருந்தான ஒதுக்கீடுகள் என்பவற்றை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிறுவனத்தை முகாமை செய்த பணிப்பாளர்களின் பெயர்கள்,

(ii) மிகையொன்று காணப்பட்டதாயின் அது எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதையும்,

(iii) பற்றாக்குறை நிலவியதெனின் அப்பற்றாக்குறை எவ்வாறு நிவர்த்திக்கப் பட்டு நிதியளிக்கப்பட்டது என்பதையும்,

(iv) தலா வருட அடிப்படையில் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கான மொத்த செலவுகளையும்

அவர் வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, நவெம்பர் 06, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0115 / '09

1.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வலய இலக்கம் 01 எனக் கொள்ளப்படுகின்ற மொனறாகல, பதுளை, நுவரெலியா,இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சமூக நலனோம்பல் கருத்திட்டங்களுக்காக 2006, 2007, 2008, 2009 ஆண்டுகளில் தனித்தனியாக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட திகதி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலுத்தியுள்ள மொத்த தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி கருத்திட்டங்களின் மூலமாக நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வள வென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0540 / '09

2.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) எமது நாட்டின் பெருந்தொகையான கடற்றொழிலாளர்கள் இந்திய அரசின் தடுப்புக்காவலில் உள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2009 சனவரி மாதம் முதல் இற்றைவரை இந்திய அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) தற்போது தடுப்புக்காவலில் உள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தடுப்புக்காவலிலுள்ள கடற்றொழிலாளர்களை விடுவிப்பதற்கு மேற்கொள் ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0648 / '09

3.

கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1999 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையிலான, வடமேற்கு மாகாண சபையின் கணக்கு அறிக்கைகளை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) மேற்படி கணக்கு அறிக்கைகளின் மூலம் வெளிவந்த மோசடிகள் மற்றும் ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) மேற்படி மோசடிகள் மற்றும் ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஈ) (i) ஒழுக்காற்று விசாரணையின் முடிவுகளுக்கேற்ப குற்றம்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், குற்றம்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ள அதிகாரிகளுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

0651 / '09

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 ஆம் ஆண்டு சுகாதார நலத்துறை , போசணை அமைச்சின் கீழ் மூலதனச் செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுத் தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் எவ்வளவென்பதையும்,

(ii) இதில் வருட இறுதியில் செலவாகிய மொத்த மூலதனச் செலவு எவ்வள வென்பதையும்,

(iii) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய மொத்த மூலதனச் செலவு எவ்வள வென்பதையும்,

(iv) செலவுசெய்யப்படாமல் எஞ்சிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வள வென்பதையும்

அவர் இச்சவைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பயன்படுத்தப்படாமல் பணம் எஞ்சியிருப்பதற்கான காரணங்கள் யாவை யென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0673 / ' 09

5.

கௌரவ விஜித ரணவீர,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தென் மாகாணத்தில் உள்ள மாவட்ட ஆதார வைத்தியசாலைகளின் எண்ணிக்கை அந்தந்த மாவட்டங்களுக்கு அமைய வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) மாவட்ட ஆதார வைத்தியசாலையொன்றில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த பட்ச பதவிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) அந்த ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(அ) (i) மேற்கூறிய ஒவ்வொரு வைத்தியசாலையும் மாவட்ட வைத்தியசாலையாக எப்போது தரம் உயர்த்தப்பட்டது என்பதையும்,

(ii) அது யாரால் என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி ஒவ்வொரு மாவட்ட ஆதார வைத்தியசாலையிலும் தற்போதுள்ள மானிட மற்றும் பௌதீக வளங்களுக்கான பற்றாக்குறை எக் காலவரை யறைக்குள் பூர்த்தி செய்யப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0696 / '09

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) நாடுபூராவிலும் அமுலில் உள்ள தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் மற்றும் வானொலி நிலையங்களுக்கான உரிமப்பத்திரம் பெற்றுள்ளவர்களினதும் நிறுவனங்களினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும், இற்றைவரை இயக்கநிலையில் இல்லாத தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் வானொலி நிலையங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களையும் வானொலி நிலையங்களையும் இயக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0725 / '09

7.

கௌரவ எம். டி. நால் கருணாரத்ன,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற நட்புறவுக் கூட்டமொன்றின் போது ஏற்பட்ட மோதல் தொடர்பாக திரு. சாகர ஹேவாகமவின் சேவை நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், சேவை நிறுத்தம் செய்யப்பட்ட திகதியையும், அது ஆரம்ப விசாரணையின் பின்னரா என்பதையும்,

(ii) அது நடைபெற்ற இடத்தையும், எவருடைய பங்கேற்பில் இடம்பெற்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இது சம்பந்தமான அறிக்கையினை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) மேற்படி மோதல் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பின் அதன் இலக்கம் யாதென்பதையும்,

(ii) இவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவையென் பதையும்,

(iii) இரண்டாவத குற்றச்சாட்டு தொடர்பாக முறையான மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) மூன்றாம் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவது இவரது சேவை நிறுத்தத்தின் பின்னபர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) ஒழுக்காற்று விசாரணையின் போது இவர் குற்றவாளியாக்கப்பட்டாரா என்பதையும், நீதிபதியின் இறுதி அறிக்கையினையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(எ) (i) இவருக்கு எதிரான முன்னைய குற்றச்சாட்டுக்கள் இருக்குமாயின் அவை யாவையென்பதையும்,

(ii) நிலுவைச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளோடு மீண்டும் சேவையில் அமர்த்தப்படுவாரா என்பதையும்,

(iii) மோதல் ரீதியான சூழலை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

இன்றேல், ஏன்?

0541/ '09

8.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 வரவு செலவுத் திட்டத்திற்கேற்ப மொத்த அரச வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) 2009 யூன் 30 ஆம் திகதியாகும் போது அரசிற்கு கிடைத்த மொத்த வருமானம் யாதென்பதையும்,

(iii) 2009 யூன் 30 ஆம் திகதியாகும் போது அரசினால் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் யாதென்பதையும்,

(iv) அரசு எந்த செலவினத் தலைப்பின் கீழ் எவ்வளவு பணத்தொகையை இவ்வாறு செலவிட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0637/ '09

9.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— சுகாதார நலத்துறை,போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அநுராதபுரம் தாதிமார் கல்லூரிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது,

(ii) இறுதியாக இத்தாதிமார் கல்லூரிக்கு மாணவர் குழுவொன்று சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iii) இவ்விதமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது,

(iv) இறுதிப் பரீட்சையின் பின்னர் இவர்கள் எப்போது கலைந்து செல்வர்

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இக்குழுவினர் கலைந்து சென்றபின்னர் புதிய குழுவொன்று சேர்த்துக் கொள்ளப்படுமாவென்பதையும்,

(ii) ஆமெனில் எத்திகதிக்கு முன்னர் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006 ஆம் ஆண்டில் தாதி மாணவமாணவியர் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படாமையின் மூலம் இத்தாதிமார் கல்லூரியை மூடிவிடுவதற்கான வேலைத்திட்டமொன்று நடைபெற்று வருவதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) அரசாங்க வைத்தியசாலைகளில் சேவையின் நிமித்தம் போதியளவு தாதிமார்கள் இல்லாத நிலைமையில் எக்காரணத்திற்காக ஆட்சேர்ப்பு தாமதிக்கப்பட்ட தென்பதை அவர்குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0652 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) லுனாவை களப்பு மேம்பாட்டு கருத்திட்டதிற்கு கிடைத்த மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டதிற்கு கடன் அல்லாத வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின் அதன் மொத்த பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) கருத்திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்வதற்கு செலவு செய்யப்பட்ட மொத்த பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கருத்திட்டத்தில் திட்டமிடப்பட்டவாறு வேலைகளை பூர்த்தி செய்யத் தவறிய துறைகள் யாவையென்பதையும்,

(ii) வேலைகள் பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0698 / '09

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "மகநகும" கருத்திட்டத்தை தாபிப்பதற்காக சமரப்பிக்கப்பட்ட 2004.01.21 ஆம் திகதிய அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மகநகும வீதி நிர்மாணிப்பு இயந்திர உபகரணங்கள் நிறுவனத்தின் தற்போதைய தலைவரின் பெயர் மற்றும் இவரின் கல்வித்தகைமைகள் என்ன என்பதையும்,

(iii) மேற்படி தலைவருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள் இவர்களுக்கென வழங்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்,

(ii) இங்குள்ள உத்தியோகத்தர்களது பெயர்கள், பதவிகள் மற்றும் இவர்கள் பெறும் சம்பளங்கள், வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் யாவையென்பதையும்

2007, 2008 மற்றும் 2009 ஆண்டுகளின் பொருட்டு தனித்தனியாக அவர் இச்சபைக்கு சமரப்பிப்பாரா?

(இ) மேற்படி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை, அவை ஒவ்வொன்றும் சொந்தமான நிறுவனங்கள் அல்லது நபர்கள் அத்துடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0542 / '09

12.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட குறை நிரப்பு மதிப்பீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குறை நிரப்பு மதிப்பீடுகள் எத்தேவையின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டன என்பதையும்,

(ii) இம்மதிப்பீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் அரச செலவினத்தைப் பார்க்கிலும் இதன் அதிகரிப்பு எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0643/ '09

13.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— சுகாதார நலத்துறை,போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வடக்கு மனிதாபிமான நடவடிக்கையின் பின்பு இடம்பெயர்ந்து வவுனியா பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்குப் போதிய சுகாதார வசதிகள் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு வசதிகளில்லை என்பதை அறிவாரா?

(ஆ) (i) மூன்று இலட்சத்துக்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மலசல கூடங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இந்நலன்புரி நிலையங்களில் தற்போது பணிபுரியும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஏனைய மருத்துவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இந்நிலையங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள உதவிச் சுகாதார பணியாட்டொகுதி எவ்வளவு,

(iv) இதுவரை இந்நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு பலவித தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளனவா,

(v) அவ்வாறாயின் இந்நோய்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது,

(vi) இங்கு பணிபுரியும் மருத்துவர்கள் அடங்கலான சுகாதாரப் பணியாட்டொகுதிக்கு வழங்கப்பட்டுள்ள தங்குமிட மற்றும் ஏனைய வசதிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0895/ '09

14.

ரவி கருணாநாயக்க,— ஏற்றுமதி அபிவிருத்தி சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனங்களுக்காக 2007, 2008. 2009 ஆம் ஆண்டுகளின் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத் தொகையையும்,

(ii) 2007, 2008. 2009 ஆம் ஆண்டுகளில் மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனங்களுக்காக உண்மையாக ஒதுக்கப்பட்ட பணத் தொகையையும்,

(iii) அமைச்சின் வினைத்திறனை பாதிக்காது அத்தகைய குறைப்பை அமைச்சு எவ்வாறு முகாமைசெய்தது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2007, 2008. 2009 ஆம் ஆண்டுகளில் தலா வருட அடிப்படையில் செலவிடப்பட்ட ஏனைய பிரதான செலவுகளுடன் அமைச்சிலுள்ள அனைத்து அமைச்சர்களுக்குமான போக்குவரத்து, வெளிநாட்டுப் பயணம், ஹோட்டல் (உள்ளூர், வெளிநாடு, பாதுகாப்பு, உதவியாளர்கள் போன்றவற்றுக்காக செலவிடப்பட்ட பணத்தொகைகளை வெவ்வேறாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0897/ '09

15.

ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து இற்றைவரை இலங்கையில் சீன அரசாங்கம் அல்லது சீனக் கம்பனிகள் மேற்கொண்டு வருகின்ற அனைத்து கருத்திட்டங்களினது பெயர்களையும்,

(ii) அவை கடன், கொடை அல்லது கூட்டு முயற்சியின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்,

(iii) மேலே (i) இற்கான நிதி மூலவளங்களையும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து செலவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) (i) அரசாங்க ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட புகையிரத எஞ்சின்கள், பொறித்தொகுதிகள், கணினிகள், செடிமரங்கள் போன்ற உபகரணங்கள் யாவை என்பதையும்?

(ii) உடன்பாடு காணப்பட்ட செலவு மற்றும் நிதியிடல் முறைமைகளையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ '05]

பா.1 / ' 09

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.2 / ' 09

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / ' 09

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / ' 09

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / ' 09

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / ' 09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / ' 09

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / ' 09

9.

